உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவம்.

மலர் 4. | காலயுத்திஸ்ரீ ஆடிமீ—1918ஸ்ரீ ஜூலைமீ | இதழ் 7

திருக்குறுந்தொகை.

நன்று நாடொறு நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்க விருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே.

சிவஞான போதம்.

ஐந்தாஞ் சூத்திரம்.

(124-வது பக்கத்தொடர்ச்சி.)

இரண்டாமதிகரணம்.

ஆங்கவை போலத் தாம் தம் உணர்வின் தமியருள் காந்தங் கண்ட பசாசத்தவையே.

(இ-ள்.) (தத்தம் விடயங்களை அளவிட்டறிந்தும், அவ்வாறறியும் தம்மையும் தம்மை அதிட்டித்து நின்று செலுத்தும் உயிரையும் அறியமாட்டாத) அவ்விந்திரியங்களைப்போல், உயிர்களும் தமது அறிவை விளக்குவதாகிய சிற்சத்தியால் இருவகை யஞ்சவத்தையில் நின்று வினைப்பயன்களை யறிந்து அனுபவிக்கும் தம்மையும், தம்மைச் செலுத்திநிற்கும் திருவருளையும் அறியமாட்டா. உயிர்கள் அவ்வாறுணர்தல் காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் சந்நிதிமாத்திரையின் வலித்துக்கொள்ளப்படுமாறுபோலக் கரணத்தாலன்றிச் சங்கற்பத்தால் அதிட்டிக்கும் முதல்வனது சிற்சத்தியாலாம். (ஆதலால் அதுபற்றி முதல்வன் விகாரியாதலில்லை.) (எ-று.)

இதில் 1 - வது—தன்றாற் கூறப்படும் பொருள்—அரனாலே உயிர்களெல்லாம் அறியும்.

2 - வது—ஐயப்பாடு—உயிர்கள் தாமே யறியுமோ, முதல்வன் அறிவிக்க அறியுமோ?

3 - வது பிறர்கூறும் பக்கம்—இந்திரிய முதலிய கருவிகள் சடமாதலால் அவை விடயங்கள் முதலியவற்றை அறிதற்குச் சித்தாகிய உயிரின் துணையை வேண்டிநிற்கும். உயிர் சித்துப் பொருளாகையால் அது வேறொரு சித்துப்பொருளின் உபகாரத்தைவேண்டாது எதையும் தானே யறியும். சித்துப்பொருளாகிய உயிர் தான் அறிதற்கு வேறொரு சித்துப்பொருளின் உபகாரத்தை வேண்டிநிற்கும் எனின், உயிருக்கு அறிவிக்கும் அச்சித்துப்பொருளும் தனக்கு அறிவித்தற்கு வேறொரு சித்துப்பொருளை வேண்டிநிற்கும் எனப்பட்டு வரம்பின்றியோடும். ஆதலால் சடப்பொருள்களாகிய ஐம்பொறி முதலிய கருவிகளை உயிரோடு உவமித்துக் கூறுதலும், உயிர் முதல்வன் அறிவிக்க அறியும் என்பதும் பொருந்தாது. (இவ்வாறு கூறுவோர் ஈசுர வவிகாரவாதிகள்.)

4 - வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு— கருவிகள் சடமாகவும் உயிர்கள் சித்தாகவும் இருக்கும் வேறுபாட்டினால் இவையிரண்டும் தம்முள் ஒவ்வாவாயினும், தம்மையும் தமது முதலையும் அறியமாட்டாமையினால் தம்முள் ஒக்கும். அன்றியும், அறிவிக்க அறியும் முறைமை தமக்கொரு முதலையுடைய பொருள்களுக்கேயன்றி, தனக்குமேலொரு பொருளில்லாத தனிப்பரம்பொருளுக்கில்லை. ஆதலால் முற்றுமுணர்ந்த முதல்வனுக்கு அறிவிக்க வேறொரு முதல்வன் வேண்டப்படுதலில்லை. அம்முதல்வன் அறிவிக்கச் சிற்றறிவுடைய உயிர்கள் அறியும்.

5-வது இயைபு—உதாரண வெண்பா.

மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகஞ் சேட்டித்த
தென்னு மறையி னியன்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணா வுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா
ணெண்ணானை சிவனசத்தை யின்று. (உ)

இந்திரியங்கள் உயிரானறிவதுபோல் உயிர் முதல்வனாலறியுமெனின், அவ்விந்திரியங்களுக்கு வரும்பயன் உயிருக்காவது போல்

உயிர்க்கு வரும் இன்பதுன்பங்கள் முதல்வனுக்காதல்வேண்டும் என்னும் ஈசுரவிகாரவாதிகளை மறுத்து முதல்வன் உயிர்களைப் போல் விகாரப்படுதலிலன் என்பதை இவ்வெண்பா விளக்குகின்றது.

(இ - ள்.) மன்னு சிவன் சந்நிதியின் உலகம் சேட்டித்தது என்னும் மறையின் இயல் மறந்தாய் = (இவ்வதிகரணத்திற் கூறிய அநுமானப் பிரமாணமாத்திரமேயன்றி) நிலைபெற்ற முதல்வனது சந்நிதியில் பிரபஞ்சம் செயற்படுகிறதென்று கூறும் வேதப்பொருளையும் மறந்தவனே—உளம் சொன்ன சிவன் கண்ணு வினையால் கண்டு அறிந்து நிற்கும் = உயிரானது, அவ்வேதத்துள் எடுத்தோதப்படும் முதல்வன் தனக்குக்காட்டாகி நிற்ப, தான்செய்த வினைக்கீடாக ஒன்றனை யறிந்து நிற்கும். (ஆனால், இந்திரியங்கள் தமக்கென வோர்காரணமின்றி உயிரின் பொருட்டே யறிவனவாம்.)—காண் = இவ்வேறுபாட்டை நீ அறிவாயாக— இன்று = (அவ்வாறு காட்டாகி நிற்பினும் தனது சந்நிதியில் அசத்தெல்லாம்) சூனியம். (ஆதலாற்) சிவன் அசத்தை எண்ணான் = ஆதலால், மங்கல வடிவினனாகிய முதல்வன் அவ்வுயிர்போல் அவற்றை அனுபவியான் (எ-று)

"மன்னு சிவன்" "சொன்ன சிவன்" "எண்ணான் சிவன்" என மும்முறை கூறியது யாதுகாரணத்தாலெனின், முதல்வனுக்கு இவ்விடத்திற் கூறற்பாலனவாகிய மூன்றிலக்கணங்களை யுணர்த்தும் பொருட்டென்க. "மன்னுசிவன்" என்பது முதல்வன் உயிர்கள் போற் பிறந்திறந்து வருந்துதலின்றி, என்றும் நிலைபெற்றிருக்கும் இன்பவடிவினன் என்னும் பொருளைத்தந்து, தனது சந்நிதியில் உலகத்தைச் சேட்டிப்பித்தலை யுணர்த்துகின்றது. "சொன்ன சிவன்" என்பது வேதத்தில் முற்றுணர்வினன் என்று எடுத்தோதப்படுபவன் என்னும் பொருளைத்தந்து சிற்றறிவுடைய உயிர்களுக்கு அறிவித்தலை யுணர்த்துகின்றது. "எண்ணான் சிவன்" என்பது தூயதன்மையன் என்னும் பொருளைத்தந்து தன் சந்நிதியில் மாயையின் காரியமாகிய அசத்தெல்லாம் முனைத்துத் தோன்றாமையை யுணர்த்துகின்றது.

வேறுபாடாவது— ஐம்பொறிகள் ஆன்மாவின் பொருட்டு உணர்வன, தம்பொருட்டு உணர்வனவல்ல; ஆன்மாக்கள் தம்பொருட்டே உணர்வன, முதல்வன் பொருட்டு உணர்வனவல்ல என்பதாம்.

உலகம் = உயிர்கள்.

மறையின் இயல் மறந்தாய் = மறையின் இயலும் பொருளையும் மறந்தவனே.

ஆதலால் = சொல்லெச்சம்.

வெய்யோ னொளியி லொடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத மீன்போல்—மெய்யவனிற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனைக்
கண்டடனாய் மன்னுதலைக் காண். (ரு)

இவ்வெண்பா, முதல்வன் உணர்த்த உயிர் உணருமாயின், உயிர் முதல்வனின் வேறாயிருந்து உணருமோ, ஒன்றாய்நின்றே உணருமோ என்று கேட்கும் ஈசுர வவிகாரவாதிகளைநோக்கி, அவ்விரண்டியல்புமின்றி நின்றுணருமென்பதை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) வெய்யோன் ஒளியில் ஒடுங்கி = சூரியன் ஒளியில் அடங்கி— விளங்காது = (அதனின் வேறாய்) விளங்கித் தோன்றாமல்—வெய்யோன் ஆகாத மீன்போல் = அச்சூரியனாதலுமாகாத நட்சத்திரங்கள் (அச்சூரியனாலே ஒளியுடையவாமாறு) போல— கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனை = கண்டும் கேட்டும் உண்டும் மோந்தும் தீண்டியும் அறியப்படும் ஐவகை விடயங்களையும்— மெய் அவனில் கண்டு = (உயிர்) மெய்ப்பொருளாகிய முதல்வனால் உணர்ந்து—உடனாய் மன்னுதலைக்காண் = (வேறாதலும் ஒன்றாதலுமின்றி அவ்விரண்டிக்கும் பொதுவாய் அடங்கி) உடனாய் நிலைபெறுதலை அறிவாயாக (எ-று.)

அஃதாவது நட்சத்திரங்கள் சூரியனிடம் ஒளியைப்பெற்று, அதின் ஒளியில் விளங்காது அடங்கி நின்று, அதனோடு ஒன்றாகாமலும் வேறாகாமலும் இருந்து பிரகாசிப்பதுபோல், உயிர்கள் முதல்வன் அறிவிக்க, அவனில் அடங்கி, அவனோடு ஒன்றாகாமலும் வேறாகாமலும் உடனாயிருந்து அறியும் என்பதாம்.

நட்சத்திரங்களின் ஒளி சூரியனிடமிருந்து உண்டாவதென்பது வேதநூற் றுணிபு.

வெய்யோனை என்பதில் ஐகாரம் சாரியை.

உயிர் என்னும் எழுவாய் மேலை வெண்பாவினின்றும் வருவிக்கப்பட்டது.

அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
யருளு மவனன்றி யில்லை—யருளின்
றவனன்றே யில்லை யருட்கண்ணோர் கண்ணுக்
கிரவிபோ னிற்குமர னேய்ந்து. (ச)

இவ்வெண்பா, முதல்வன் அறிவிக்க உயிர்கள் அறியுமெனின், உயிர்களின் அறிவு ஒருவகையாயிராமல் பல்வேறு வகையாயிருத்தலினால் முதல்வன் உணர்த்து முறைமையும் வேறுபட்டிருத்தல் வேண்டும் எனப்பட்டு, முதல்வன் நிர்விகாரி என்னுஞ் சுருதிக்கு மாறாக விகாரி யென்று சொல்லவேண்டிவரும் என்னும் ஈசுரவவிகாரவாதிகளை நோக்கி முதல்வன் விகாரியாகாமையை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) அருள் ஈசற்கு அன்றே உண்டாம் = (உயிர்கட்குப் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதற்கண் உளதாகிய) இரக்கம்முதல்வனுக்கு அநாதியேயுள்ளது.—அது சத்தி = அவ்விரக்கம் (முதல்வனின் வேறுபொருளன்று; முதல்வனுக்குளதாகிய) சத்தியேயாம்.—அருளும் அவனன்றி இல்லை, அவன் அருள் இன்று இல்லை = (இரக்கமும் அவனும் முறையே குணமுங்குணியுமாதலால், அஃதாவது இரக்கம் அவனுடைய குணமாதலால்) அவ்வருளும் முதல்வனை இன்றியமையாது. முதல்வனும் அவனை யின்றியமையானாய்—அருட் கண்ணோர் கண்ணுக்கு இரவிபோல் எய்ந்து நிற்கும் அரன் = ஞானக்கண்ணுடையார் உணர்விற்கு, சூரியன் தன் ஒளியோடு தாதான்மியமாய் இயைந்து நிற்பதுபோல், (அவ்வருளோடு தாதான்மியமாய்) இயைந்து நிற்பன் முதல்வன். ஆதலால், தன்வயத்தனாகிய அம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சத்தி சங்கற்பமாத்திரையால் அனைத்துஞ் செய்தல் கூடும். (எ-று.)

இவ்வியல்பு சித்தாந்த நெறியுணர்ந்தார்க்கன்றி விளங்காதென்பார் "அருட்கண்ணோர் கண்ணுக்கு" என்றருளினார்.

அவன் அன்றே என்பதில் அன்றே என்பது அசை.

திருவாசகம்.

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருட்டோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்கவளையு முடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

குவளைக் கண்ணி கூறன்காண்க
அவளுந் தானு முடனே காண்க.

ஐந்தாஞ் சூத்திரத்தின் தொகைப்பொருள்—உயிராலே தத்துவங்களெல்லாம் தொழில் செய்யும் என்பதும், அரனாலே உயிர்களெல்லாம் அறியும் என்பதும் இச்சூத்திரத்தாற் சாதிக்கப்பட்டது.

சைவசமயம்.

இஃது

ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களால் எழுதப்பட்டு இலங்கைச் சைவபரிபாலனசபையினரால் துண்டு பத்திரிகையில் அச்சிடப்பட்டது

தேவாரம்.

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதி னாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயக னாதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே.

நாம் வழிபாடுசெய்யும் கடவுள் சிவன் எனப்படுவர். சிவன் என்பது ஒளிமயமாயிருப்பவர், விகாரமில்லாதவர், பெருமகிழ்ச்சியுடையவர், மங்கலமுடையவர், வேதப்பொருளாயிருப்பவர், சுகரூபமுடையவர், நினைப்பவர்மனத்திற் கிடப்பவர், நன்மைகொடுப்பவர், மோக்ஷங்கொடுப்பவர் எனப் பொருள்படும். அவர், முன்னுள்ள பொருள்களெல்லாவற்றிற்கும் முன்னுள்ளவர். எல்லாங் கடந்து விளங்கும் பரஞ்சோதிரூபர். பூமி, நீர், நெருப்பு, வாயு, ஆகாயம், ஆதித்தன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டுந் தமக்கு வடிவாய் எங்கும் இருப்பவர். எந்த உயிர்களினும் இரக்கமுடையவர். "கருப்பைக்குண் முட்டைக்கும் கல்லினுட் டேரைக்கும் விருப்புற் றமுதளிக்கும் மெய்யர்." அறிவித்தலின்றி எவைகளையுந் தாமாகவே அறியும் பேரறிவாளர். செய்ய வேண்டியவைகளுஞ், செய்யாது விலக்கவேண்டியவைகளும் இவை இவை என்றே யாவரும் அறியும்பொருட்டு வேதங்களையும், ஆகமங்களையும் அருளிச்செய்த முழுமுதல்வர். கனியினும் இனியவர். கரும்பினும் இனியவர்.

தேவாரம்.

கனியினுங் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே.

அவர் அங்கிங் கெனுதபடி எங்கும் நிறைந்தவராயினும் சிவ லிங்க வடிவத்திலும், குருவடிவத்திலும், சிவபத்தர் வடிவத்திலும் அணியராய் வெளிப்பட்டு உயிர்களுக்குக் கிருபைசெய்பவர். அள வுகடந்த வலிமையுடையவர். தேவர் யாவர்க்கும் மேலானதேவர். பிறப்பிறப்பில்லாதவர். விருப்பு வெறுப்பில்லாதவர். நினைப்பு மறப்பில்லாதவர். ஒப்புயர்வில்லாதவர். பிறவிகளிலே விட்டு வினைப்போகங்களை ஊட்டியும், உய்யும் வழிகாட்டியும், முத்திகூட் டியும் உயிர்களைக் காக்கும் ஆதிநாயகர்.

சிவபோகசாரம்.

மனம்வாக்குக் காயமுயிர் மன்னி யசைப்பானும்
அனமாதி போக மளிப்பானும்—நனவாதி
கூட்டிவிடு வானுமுத்தி கூட்டிடுவா னும்பிறவி
ஆட்டிவிடு வானு மரன்.

இவ்வியல்புடையவராகிய சிவனைக் கடவுள் எனக் கொண்டு வேதம் முதலிய சாத்திர விதிகளையுந் தழுவி நடக்கும் நெறி சைவம் என்றும், சைவசமயம் என்றுஞ் சொல்லப்படும். சைவம் என்பது சிவனைக் கடவுளாகவுடையது என்றும், சிவசம்பந்த முடையது என்றும், சிவனாற் செய்யப்பட்டது என்றும் பொருள்படும். சம யம். என்பது நெறி என்றும், ஆசாரம் என்றும், மார்க்கம் என் றும் பொருள்படும். இந்த நெறியிலே நடப்போர் சைவர் என்றும் சைவசமயிகள் என்றுஞ் சொல்லப்படுவர். "சைவத்தின் மேற்சம யம் வேறிலையதிற் சார்சிவமாந் தெய்வத்தின் மேற்றெய்வமில்" என்று சைவ எல்லப்பநாவலர் கூறுவர். "சைவ சமயமே சமயம்" என்று தாயுமானவர் கூறுவர். சைவ சமயத்தைச் சாருதல் இலகு விற் கிடைப்பதன்று.

சிவஞானசித்தியார்.

வாழ்வெனு மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மையோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிதுசால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியினானைப் போற்றுவ ரருள்பெற் றாரே.

சைவசமயிகள் யாவருந் தாஞ்செய்துகொள்ளவேண்டிய புண் ணியச் செயல்களையும், செய்யாது விலக்கிக்கொள்ளவேண்டிய பா வச் செயல்களையும், புண்ணியபாவச் செயல்களை அறிந்து பலன்

கொடுக்கும் பரமபதியாகிய சிவனையும், அவருடைய இலக்கணங்களையும், உயிர்களாகிய தமதிலக்கணங்களையும், தம்மை அலைத்து வருத்தும் பிறவித் துன்பங்களையும், அவை ஒழியும் வழியையும் அவசியம் அறியவேண்டும்.

தினகரவெண்பா.

தன்மமிது பாவமிது தானென் றறியாத
சென்ம மென்னின் கோவூர்த் தினகரா—நன்மை
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தா னோடூர்ந்தா னிடை.

சைவசமயிகள் அறியவேண்டிய புண்ணியச்செயல் முதலிய வைகளையெல்லாம் வேதாகமங்களும், வேதாகமங்களைத் தழுவித் தமிழ்மொழியிற் செய்யப்பட்டிருக்கின்ற திருவள்ளுவர் முதலிய நீதிசாத்திரங்களுஞ் சிவதருமோத்தரம் முதலிய சைவசாத்திரங்களும் வெளிப்படையாக அறிவிக்கும். ஆராயுங்காற் "செய்யவேண்டியது புண்ணியம்; செய்யாதொழியவேண்டியது பாவம். புண்ணியமாவது உயிர்களுக்கு இனிமைசெய்தல்; பாவமாவது துயரஞ் செய்தல்" என்பது சைவசாத்திரங்களின் சுருக்கமான கருத்தாகும்.

திருவள்ளுவர்.

செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

(செயற்பாலது—செய்யவேண்டியது. ஓரும்—அசை. உயற்பாலது—ஒழியவேண்டியது.)

இப்புண்ணியங்களும் சிவபுண்ணியங்கள் என்றும், பசுபுண்ணியங்கள் என்றும் இரண்டுவகை. சிவபுண்ணியங்களாவன சிவசின்னமாகிய விபூதிருத்திராக்ஷந்தரித்தல், சிவனைத் தியானித்தல், சிவனைத் துதித்தல், சிவனை வணங்கல், சிவமூலமந்திரஞ் செபித்தல், சிவாலயப்பணிசெய்தல், திருநந்தனவனம்வைத்தல், தேவாரம் முதலியவைகளை யோதுதல், சிவபுராணங்கேட்டல் முதலியனவாம். இவை சநாதன தருமங்கள் என்றுஞ் சொல்லப்படும். சநாதனம்—நிலையாயிருப்பது. "வச்சிரவரிசிமானத்—தளர்வுறு நிலைபெறத்தூமுயர் சிவதருமம்" என்பது காஞ்சிபுராணம்.

பசுபுண்ணியங்களாவன் கொல்லாமை, உண்மைபேசல், பிறன் பொருள் விரும்பாமை, நடுநிலைநிற்றல், உபகாரஞ்செய்தல், நன்றி மறவாமை, இரக்கமுடைமை, நூல்பயில்கற்றல், இனியசொற்பேசல், வறியார்க்குக்கொடுத்தல், புண்ணியங்களைப்போதித்தல், அன்ன சாலை, வித்தியாசாலை முதலிய தருமசாலைகளைத் தாபித்தல், பழி பாவங்களுக்கு நாணுதல், தீங்குக்கு அஞ்சுதல் முதலியனவாம். பசுபுண்ணியம்-உயிர்களைநோக்கிச் செய்யும் நற்செயல். பசு-உயிர்.

இப்புண்ணியங்களைத் தம்மால் இயன்ற இயன்றவரையும் யாவருஞ் செய்தல்வேண்டும். நாம் முன்னர்ச் செய்துவைத்த புண்ணியங்களின் பலனாகவே பெறுதற்கரிய மானுடசரீரமும், நாம் அநுபவிக்கும் பலவகை ஐசுவரிய சுகங்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. கிடைத்திருக்கும் இவைகளை அநுபவித்தல் மாத்திரமாகிய அவ்வளவே செய்துகொண்டு பின்னும் சுகம் பெறற்குக் காரணமாகிய புண்ணியங்களைச் செய்யாதொழிதல் பாலை மாத்திரங் கறந்துண்டுகொண்டு, உணவும் நீருங் கொடுத்துப் பசுவைப் பேணுதொழிதல்போன்ற பேதைமையாம்.

அறநெறிச்சாரம்.

அம்மைத் தாஞ்செய்த வறத்தின் வருபயனை
இம்மைத்துய்த் தின்புறு நின்றவர்—உம்மைக்கும்
அறஞ்செய்யா தைம்புலனு மாற்றுத னல்லாக்
கறந்துண் டஃதோம்பாமை யற்று.

[அம்மை—முற்பிறப்பு. அறம்—தருமம். இம்மை— இப்பிறப்பு. துய்த்தல்—அநுபவித்தல். உம்மை—வருபிறப்பு. நல்லா—நல்லபசு. ஓம்பாமை—பேணாமை. அற்று—போலும்.]

அந்தியகாலத்திலே அருந்துணையாய்ச்சென்று உயிர்களுக்கு உதவுவனவும் புண்ணியங்களேயாம். மனைவிமக்களும், இனசனங்களும், தனதானியங்களும், மாடமாளிகைகளும் கூடச் சென்று உதவுவனவல்ல.

சீவதருமோத்தரம்.

பாம்பழல் வாயினுற் பற்ற மண்டுகம்
தேம்பிடுந் துயருறுஞ் சீவன் றேயுநாள்
ஓம்பிட வல்லரோர் வுற்ற மற்றையார்
போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்.

பாவங்களாவன சிவநிந்தை, சிவசாத்திரநிந்தை, சிவத்திரவி யங் கவர்தல், கொலை செய்தல், மாமிசம் புசித்தல், பிறர்பொருள் விரும்பல், மதுநீர் குடித்தல், நன்றி மறத்தல், பொய் பேசுதல், பொய்வழக்குப் பேசுதல், ஏழைகளை வருத்தல், உடன்பட்டு மறுத் தல், பிறவுயிர்க்குவருந் தீங்கினைத்தடுக்க வலியிருந்தும் எனக்கென்ன வென்று வாளாவிருத்தல் முதலியனவாம். பாவங்களால் அடையும் பயன் நரகத்துன்பம் முதலியன. "மறைகளீசன்சொலச் சொலின் வழிவரா வுயிர்கள் வைக்குஞ் சிறைகண் மாநிரயம்" (சிவஞான சித்தியார்.)

இவ்வாறாய பாவங்களையெல்லாம் முற்றவிலக்கிப் புண்ணியங்க ளையே தங்கள் தங்கள் வலிமைக்கும் நிலைமைக்குந் தக்கபடியே செய்து, பலன்கொடுக்கும் முதல்வராகிய சிவனையும் வழிபட்டு உய்திபெறுதற்குரிய நெறியாகிய சைவசமயம் சைவசாத்திரங்களா லன்றி மற்றொன்றால் அறியப்படமாட்டாது. ஆதலாற் சைவசமயி கள் யாவருஞ் சைவசாத்திரங்களை அன்போடும் படித்தும் கேட் டும் உண்மையெல்லாம் உணரப்பெற்றுச் சிவனையும் தியானஞ் செய்து பேரின்பம் பெறக்கடவர்.

மெய்ம்மொழி.

சத்திய முரைக்க நாளுஞ் சகலபல் லுயிர்க ளுக்கும்
நித்தலு மிதமே செய்க நினைக்குக சிவத்தை யென்றும்
அத்தன்வே தாக மத்தி லருளிய பொருளிம் மூன்றும்
எத்திறச் சமயத் தோர்க்கு மெம்மதங் களுக்கு மிட்டம்.

வருந்தமறவுய்யும்வழி.

நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை
என்றுஞ் சிவன்றா ளிணை.

திருச்சிற்றம்பலம்.

மீமாம்ஸா நியாயவிளக்கம்.

சிற்றறிவும், சிறுதொழிலும், சின்னாளும், பலபிணியும் இலக் கணமாகவுடைய பெத்தான்மாக்கள் அறிவு பெற்றுய்யும் பொருட் டுப் பரமசிவனாலே அருளிச்செய்யப்பட்ட நூல்கள் பதினெட்டு. அவற்றுள் மீமாம்ஸா சாஸ்திரம் ஒன்று. அதில் ஆயிர நியாயங்கள்

கூறியிருக்கின்றன. அவற்றுள் ஸர்வசாதாரணமாய் நூல்களிலே காணப்படுஞ் சில நியாயங்கள் ஈண்டு விளக்கப்படுகின்றன. (நியாயம் என்றால் திருஷ்டாந்தம்.) அவைவருமாறு:—

(1) சமுத்திரகலச நியாயம்.

சமுத்திரத்தில் குடத்தைப்போட்டு மொண்டால் குடங்கொண்ட ஜலந்தான் வரும் என்பதுபோன்ற ஓர் நெறி.

(2) ஸ்தூலாருந்ததி நியாயம்.

பெரிதான நக்ஷத்திரத்தை முன்னர்க்காட்டி அதுவாயிலாகச் சிறிதான அருந்ததியைக் காட்டுதல் என்பதுபோன்ற ஓர் நெறி.

(3) சுந்தோபசுந்த நியாயம்.

சுந்தன் உபசுந்தன் என்னும் அசுரரிருவரும் திலோத்தமை என்னும் தெய்வமாதின் பொருட்டாக ஒருவரை யொருவர் கோறல் புரிந்து ஒருங்கே யழிந்தது போன்ற ஓர் நெறி.

(4) கைமுதிக நியாயம்.

பூனைக்கு இத்துணை அஞ்சுவானாயின் புலிக்கு அஞ்சுதல் எத்துணை என்பது சொல்லவேண்டியதில்லை என்பது போன்ற ஓர் நெறி.

(5) நீரக்ஷீர நியாயம்.

நீரும் பாலுமாகிய இருபொருள்கள் வேறுபாடு தெரியாவண்ணம் கலந்து ஒற்றுமையாய் இருப்பதுபோன்ற ஓர் நெறி.

(6) திலதண்டுல நியாயம்.

எள்ளும் அரிசியுமாகிய இருபொருள்கள் கலந்திருந்தும் பிரிந்தே காணப்படுவதுபோன்ற ஓர் நெறி.

(7) காகதாளி நியாயம்.

காகம்ஏறப் பனம்பழம் விழுந்தது என்பதுபோன்ற ஓர் நெறி.

(8) காகாக்ஷி நியாயம்.

காகத்தின் கண்ணுறை கருமணி ஒன்றே இரண்டு கண்களினுஞ் சென்று உபயோகப்படுவதுபோல ஒருபொருளே இரண்டிடத்தும் உபயோகிக்கப்படுதல்போன்ற ஓர் நெறி.

(9) பிரமரகீட நியாயம்.

வண்டினால் கொட்டப்படும் புழுவானது அவ்வண்டையே நினைத்துக்கொண்டு அதன் ரூபத்தை யடைவதுபோன்ற ஓர் நெறி.

(10) கேதாநுகேதிக நியாயம்.

ஒன்றையும் விசாரியாமலே ஒருவர் சென்ற வழியே மற்றொருவர் செல்லல்போன்ற ஓர் நெறி.

(11) பிரதிசங்கிதை நியாயம்.

ஒரு விஷயத்தைப் பலவாகப் பிரித்துத் தனித்தனியாக ஒவ்வொருவருக்குச் சொல்லுதல்போன்ற ஓர் நெறி.

(12) மாகேளக நியாயம்.

விரித்துச்சொல்லப்பட்ட பல விஷயங்களையுந் தொகுத்து ஒருவருக்குச் சொல்லுதல்போன்ற ஓர் நெறி.

(13) சாகபசு நியாயம்.

ஓரிடத்துப் பொதுச்சொல்லாற் கூறிய ஒருபொருளை நன்றாக விளக்கும்பொருட்டும் மற்றோரிடத்தில் அதன் சிறப்புச் சொல்லாற் கூறுதல்போன்ற ஓர் நெறி.

(14) சூசிகடாகநியாயம்.

கடாரத்திற்காகப் பொருள்கொடுத்தவன் முன்னரும், ஊசிக்காகப் பொருள்கொடுத்தவன் பின்னருமாயிருக்கவும் கடாரத்தின் வேலை நாள் நீடிப்பையுடையதும் ஊசியின்வேலை அவ்வாறு இல்லாததுமா யிருத்தல்பற்றி பின்னர் பொருள் கொடுத்தவனுக்கு முன்னர் ஊசியைச் செய்துகொடுத்தலும் முன்னர் பொருள்கொடுத்தவனுக்குப் பின்னர் கடாரத்தைச் செய்து கொடுத்தலும்போன்ற ஓர் நெறி.

(15) தேகிளீதீப நியாயம்.

வீட்டின் நடையில் ஓர் தீபம் ஏற்றிவைத்தால் அது இருபுறமும் ஒளி கொடுப்பதுபோல் ஒரு சொல் இரண்டு சொற்களின் நடுவில் உபயோகித்தலால் அதன் பொருள் இரண்டிலும் சேர்தல் போன்ற ஓர் நெறி.

(16) பிராம்மணவசிஷ்ட நியாயம்.

பிராம்மணர்கள் வந்தார்கள் வசிஷ்டர்வந்தார் என்று கூறுமிடத்து பிராம்மணருட் சிறந்த வசிஷ்டரைச் சிறப்பு நோக்கி வேறெடுத்துச் சொன்னதுபோன்ற ஓர் நெறி.

(17) சதேபஞ்சாசத் நியாயம்.

ஐம்பது வேண்டும் என்ற ஒருவனுக்கு நூறு கிடைத்துவிடின் ஐம்பது கிடைத்தது என்பதும் சித்தித்தது என்பதுபோன்ற ஓர் நெறி.

(18) தாலிபுலாக நியாயம்.

ஒரு பானை சோற்றிற்கு ஒருசோறு பதம்பார்த்தல் என்பதுபோன்ற ஓர் நெறி.

சோளங்கிபுரம்-சிவஅருணகிரி முதலியார்.

பரமதபங்க வினாவிடை.

(136-வது பக்கத்தொடர்ச்சி.)

சை. கருவிகள் கூடாதபோது மூடமாய் மூலையின் முடங்கிக்கிடந்து சீவிக்கும் ஆன்மாவுக்கு வேறேயொரு கடவுளிருந்து அறிவிக்கவேண்டியதில்லையென்னும் உமது பட்சத்தை இன்னுமொருதரம் எமது சந்நிதியில் வாய் திறப்பது உமக்குப் பெருமையை யுண்டுபண்ணுது கிடீர். யாம் ஆன்மாவுக்கு அறிவுண்டென்பதைச் சொல்லுகிறோங்கேளும்.

ஏ. சொல்லும் பார்ப்போம்.

சை. ஆன்மாவுக்கு அறிவுண்டு. இவ்வறிவு அறிவித்தாலறியுமறிவேயன்றித் தானே யறியுமறிவாகாது. கண்ணுக்கு ஒளியுண்டு. இவ்வொளி காட்டுவித்தாற் காணுமொளியேயன்றித் தானே காணுமொளியாகாது. கண்ணொளிக்குக் கதிரொளி காட்டியுபகரிப்பதுபோல ஆன்மவறிவுக்குப் பரவறிவு அறிவித்து உபகரியாநிற்கும். கண்ணனது காட்டுவித்தாற் காண்பதுபோல ஆன்மா அறிவித்தாலறியும். இவ்வாறு தெளிந்திடாமையால், அறிவுக்குமேலறிவுண்டோ என்று ஆசங்கித்தீர். அன்றியும், ஆன்மவறிவுக்குக் கண்ணொளியே உபமானமாயினதறியாமல், தீபத்துக்கு மேலொரு தீபமுண்டோ வென்றுந்

தருக்கினீர். தீபம் அறிவிக்கு மறிவுக்கே உபமானமாயின தறியீர். என்செய்வீர் பாவம்! இத்தீபம் ஒன்றாயிருந்தபோதும், பலவாய் விஜ்ரும்பித்தபோதும் அதனிடத்து ஒளிமறைந்ததில்லை. அது கண்ணுக்குக் காட்டாயிருந் துபகரிக்குந் தன்மையுங் குன்றினதில்லை. இதனை அறிவுக்கறிவாயிருந் துபகரிக்குஞ் சிவத்துக்கு உவமித்திடுதலே கூடும். இச்சிவம் ஏகமாயிருந்தபோதும், பலவுருவுருக்கொண்டு திருவிளையாடல்கள் புரிந்தபோதும் அதனிடத்து அறிவுமறைந்ததில்லை. அது அறிவுக்கு அறிவாயிருந்து உபகரிக்குந்தன்மையுங் குறைந்ததில்லை. இதனைவிடுத்து ஆன்மவறிவே சகசீவபரங்களாக விரிந்ததென்று நீர் சொல்லியது கண்ணினது ஒளிதானே சூரியன்-ஆடு-மாடு முதலிய பொருள்களாக விரிந்தது என்று ஒருவன் வாதிடுவதற்கே ஒப்பாகும். ஆகையால், உமது ஆன்மா பரவஸ்துவாகாது. ஆன்மவறிவுக்கு மேலிட்டது பரவறிவு என்று யாம் சாதித்ததே நிலைபெற்றது.

ஏ. யாம் இனிக் கண்ணொளி கதிரொளியானதாகக் கூறுவதில்லை. கதிரொளியே கண்ணொளியாயினதாகக் கூறுகின்றோம். இப்படியே ஆன்மவறிவு பரவறிவானதாகக் கூறுவதில்லை. பரவறிவே ஆன்மவறிவாயினதாகக் கூறுகின்றோம். இதற்கென்ன சொல்லுகிறீர்?

சை. கண்ணுக்குக் காணுமொளியும், கதிரோனுக்குக் காட்டுமொளியு முண்டாயினமையால், இரண்டொளிகளு மொன்றாகா. இப்படியே ஆன்மாவுக்கு அறியுமறிவும், சிவத்துக்கு அறிவிக்குமறிவு முண்டாயினமையால் இரண்டறிவுகளு மொன்றாகா. ஒரு தீபத்திலிருந்துண்டான பலதீபங்களுக்குங் காட்டுந் தன்மையே சிறந்திருக்கின்றது. இதுபோலவே யன்றோ ஒரு அறிவிலிருந்துண்டான பல அறிவுகளுக்கும் அறிவிக்குந் தன்மையே சிறந்திடல் வேண்டும்? இவ்விலக்கணம் ஆன்மவறிவுக்கு அறிவிக்குஞ்சிவனிடத்திலே தானே யமையும். உமது சித்தாந்தப்படித் தேகங்கடோறும் பின்னம் பின்னமாயிருக்கும்அறிவுகளெல்லாம் அறிவுக்குமறிவாகிய பரவறிவேயாயின், இப்பலவறிவுகளும் வேறு எந்த அறிவுகளுக்கு அறிவிப்பது? அறியுமறிவாகிய ஆன்மாவுக்கு வேறாக அறிவிக்கு மறிவாகிய சிவமுள்ளதென்பது உமக்குக் கசப்பாய் முடியுமாயின், உம

மையொத்த ஆன்மவறிவுகள் போகுங்கதிதானென்னை? கண் குருடன் தடியூன்றி நடப்பதுபோலும், சாலேசரமுடையவன் பார்வைக் கண்ணாடிகொண்டு பார்ப்பதுபோலுந் தேகேந்திரிய பிராணாந்தக் கரணங்களைத் துணைகொண்டு சீவிக்கும் ஆன்மவறிவைச் சுதந்தரவறிவென்றும், இதற்குமேலொரு பரவறிவில்லை யென்றும் போதிக்கும் உமது மாயாவாதமதம் துணை தேடாது வழிநடக்குங் குருடர்களுக்காக வெட்டி வைத்த படுபள்ளமென்றே துணியக்கடவீர்.

எமது ஆன்மா அறிவாயிருந்தும், அது தானே யறியாமல் மற்றோ ரறிவின்றுணையால் சீவிக்குமாறென்னை?

கண்ணானது ஒளியாயிருந்தும், அது தானேகாணமல் மற்றோரொளியின்றுணையால் சீவிக்குமாறென்னை?

கண்ணினது ஒளி அற்பமாயிருத்தலால், அது இருளினது ஆற்றலின் முன்னர் ஒங்கப்பெற்றிலது. கதிரோனது ஒளி அதிகமாயிருத்தலால், அக்கதிரோனது சந்நிதியில் இருளினது ஆற்றல் ஒங்கப்பெற்றிலது.

நீர் விளக்கிய உபமானவாயிலாகவே உபமேயத்தை யாம் விளக்குகிறோங்கேளும். ஆன்மாவினது அறிவு அற்பமாயிருத்தலால், அது ஆணவவிருளின் முன்னர் ஒங்கப்பெற்றிலது. சிவத்தினது அறிவு அதிகமாயிருத்தலால், அச்சிவசந்நிதியில் ஆணவ இருளினது ஆற்றல் ஒங்கப்பெற்றிலது. அன்றியும், சூரியனது சந்நிதியில் இருணீங்குவதால் கண்ணொளி சீவிக்கின்றது. இப்படியே சிவசந்நிதியில் ஆணவ இருணீங்குவதால் ஆன்மவறிவு சீவிக்கின்றது.

ஆணவ இருளென்பது யாது?

ஆன்மாவுள்ளபோதே அதனோடு நித்தமாய் அவ்வான்மாவினது அறிவை மூடியுள்ள பேரிருளாம். இது கண்ணினது ஒளியை மூடியுள்ள பூதவிருள்போல்வதொன்று. இவ்வாணவமலமே யன்றி, ஆன்மாவுக்குத் தநு கரண புவன போகங்களாகக் காரியப்பட்ட மாயாமலமொன்றும், இம்மாயாபோகத்தை ஆன்மா நுகரும்படிச்செய்யுங் கன்மமலமொன்றும் ஆக மூன்று மலங்களும் நித்தியமாம்.

சிவம் ஒன்று, மலங்கள் மூன்று என்று கணக்கேற்பட்டபடி ஆன்மாக்க ளித்தனையென்று யாதேனுங் கணக்குண்டா?

சை. ஆன்மாக்க ளித்தனையென்று ஆன்மா விசாரிக்கவேண்டிய ஆவசியகமின்று. ஒவ்வோரான்மாவும் பெத்ததசையில் மல வீக்கமும், முத்திதசையில் சிவப்பேறு மெய்தலால் சிவம் ஒன்றெனவும், மலங்கள் மூன்றெனவுங் கணக்கேற்பட்டது உசிதந்தான். ஆன்மாக்கள் இத்தனையென்று தெரிந்துகொள் ளுவதனால் ஆன்மாக்களுக்குத் தேறத்தக்க லாபம் யாது? ஆயினும், அவ்வான்மாக்களுக்கு மாயையிற் காரியப்பட்ட தநு கரண புவன போகங்களைக் கூட்டுதலாகிய சிருட்டியை யும், அவைகள் கன்மங்களை நுகரும்படிச் செய்தலாகிய திதி யையும், அவைகளுக்கு ஆணவபந்தத்தை யகற்றுதலாகிய சங்காரத்தையுஞ் செய்து வருபவனாகிய தலைவனுக்கு அவ் வான்மாக்க ளித்தனையென்னுங் கணக்குத் தெரியாமற்போ காது. யாம் அவ்வுயிர்க் கூட்டத்து ளடங்கியவோர் பசு. எமக்கு மொத்தமாய்ப் பசுக்கள் பல என்று சொல்லத் தெரி யும்.

ஏ. இன்னும் யாதேனுங் கேட்கலாமா?

சை. நாமெடுத்துக்கொண்ட விஷயம் முடிந்திருந்தால், வேறு விஷ யந் தொடங்கலாம்.

ஏ. இன்னும் எடுத்துக்கொண்ட விஷயம் முடியவில்லையோ?

சை. "ஆன்மா ஒன்றாயிருந்தபோதும், அது பலவானபோதும் நீர் கண்ட வேறுபாடு யாது" என்று முன்பு கேட்டிருக்கின் றீர். அதற்கு இங்கே விடையளிக்கின்றோங் கேளும்.

ஏ. அதிக சந்தோஷம் சொல்லுமையா.

சை. உமது பட்சத்தின்படி ஒன்றாயிருந்தது அறிவும், பலவாய் விரிந்தது சகசீவபரங்களுமாமன்றோ?

ஏ. ஆம்.

சை. நீர்கூறியவாற்றான் அறிவுகாரணமும், சகசீவபரங்கள் காரியமு மாயின. காரணமெத்தன்மைத்தோ, காரியமு மத்தன்மைத் தாதல்வேண்டும். அறிவாகிய காரணத்தினின்று முண்டாகிய சகசீவபரங்கள் அறிவாயிருக்கின்றனவா?

ஏ. வேறு எப்படியிருக்கின்றன? நீர்தான் சொல்லும்.

(இன்னும் வரும்.)

மனுநீதிகண்டசோழர் சரித்திரம்.

(சிதம்பரம் இராமலிங்கப்பிள்ளையவர்கள் இயற்றிய வசனம்.)

சோழமண்டலத்திலே, சூரியகுலத்தர்களாகிய சோழராஜாக்களுக்கு உரிய இராஜதானிகள் ஐந்தனுள் ஒன்றாகியும், காவற்கடவுளாகிய விட்டுணுவினுடைய மனைவியாகிய இலக்குமியினாலே பூசிக்கப்பட்டதாகியும், பிரமாவின் சரீரமாகிய பிரமாண்டத்துக்கு மூலாதாரஸ்தலமாகியும் உள்ளது திருவாரூர். அத்திருவாரூரின்கண் இருந்து அரசியற்றிய சோழராஜாக்களுள்ளே மனுநீதிகண்டசோழரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் உயிர்களுக்கெல்லாங் கண்ணும் உயிரும் போன்றவர். வன்மீகநாதராகிய சிவபெருமானுக்கு நிபந்தம் அமைத்து, பூசைமுதலியவைகளைச் சிவாகம விதிப்படி வழுவாது சிரத்தையோடு நடத்துவிப்பவர்.

அவர் செங்கோல்நடாத்தி அரசியற்றுநாளிலே, அவர்செய்த சிவபுண்ணிய மிகுதியினாலே, அவருக்கு ஒருபுத்திரன் அவதரித்தான். அவன் பலகலைகளையுங் கசடறக்கற்று வல்லனாகி, அறிவொழுக்கங்களிற் சிறந்து, இளவரசாதற்குத் தக்கபருவத்தையுடையனாய் வாழுநாளிலே, ஒருநாள், இராசமாளிகையினின்றும் புறப்பட்டு, இராசகுமாரர்களுஞ் சேனைகளுஞ்சூழத் தேரிலேறி வீதியிற் சென்றான். செல்லும்பொழுது வீதியிலே ஒருபசுக்கன்று துள்ளிக்கொண்டு போய், அத்தேர்க்காலினடியில் அகப்பட்டிறந்தது. அது கண்ட தாய்ப்பசு சுழன்று ஓடிவந்து, அலறிச் சோர்ந்து, நடுங்கி விழுந்தது. சோழபுத்திரன் அதுகண்டு, "அபாயம் வந்ததே" என்று தடுமாறி, மனத்துயரங்கொண்டு, அறிவழிந்து, தேரினின்றும் வீழ்ந்தான்; அலறுகின்ற தாய்ப்பசுவைப்பார்த்து உயிர்பதைத்துச் சோர்வான்; இறந்துகிடக்கின்ற கன்றைப்பார்த்துப் பெருமூச்செறிந்து இரங்குவான்; "நானொருவன் பிறந்தது என்னுடைய தந்தையாருக்கு இப்பழி வந்தெய்துதற்கோ" என்பான். "எனக்கு அபுத்திபூர்வகமாக வந்த இப்பாவத்திற்குப் பிராயச்சித்தம் உளதாயின், என்னுடைய தந்தையார் அறியுமுன்னமே பிராமணர் விதிக்கும் பிரகாரஞ்செய்து கொள்ளல்வேண்டும்" என்று சிந்தித்துப் பிராமணரிடத்தே சென்றான்.

தன்கன்றை இழந்த பசு அத்துயரத்தைச் சகிக்கமாட்டாது பெருமூச்செறிந்து, கண்ணீர் வாரச் சென்று, இராசமாளிகை வாயிலிற்கட்டிய ஆராய்ச்சி மணியைத் தன்கொம்பினால் அடித்தது.

அதுகேட்ட மனுநீதிகண்டசோழர் சிங்காசனத்தினின்றும் இறங்கி விரைந்து போந்து, வாயிலை அடைய; வாயிற்காவலாளர்கள் எதிர் வந்து வணங்கி, "மகாராஜாவே, இங்கே ஒரு பசுவந்து ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அடித்தது" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். மனுநீதிகண்ட சோழர், அது கேட்டு, வருத்தமுறுகின்ற பசுவைப்பார்த்து,"இப்பசுவுக்கு யாது இடையூறு நிகழ்ந்தது" என்று மந்திரிகளைக் கோபித்துப் பார்க்க, அம்மந்திரிகளுள் ஒருவன் வணங்கிநின்று, "மகாராஜாவே, உம்முடைய புத்திரன் தேர்மேலேறி வீதியிற்போம்பொழுது, ஒருபசுக்கன்று அத்தேர்க்காலில் அகப்பட்டிறந்தது. அதன்றாயாகிய இப்பசு இங்குவந்து ஆராய்ச்சிமணியை அடித்தது" என்று விண்ணப்பஞ் செய்தான். அதுகேட்ட மனுநீதிகண்டசோழர் பெருந்துயரங்கொண்டு இரங்கி ஏங்கி, "என் செங்கோன்முறைமை நன்று நன்று" என்பார்; இது யாது செய்தாற்றீரும்" என்பார்; கன்றையிழந்த தாய்ப்பசுவின் முகத்தைப் பார்த்துச் சோர்வார். மந்திரிகள் அது கண்டு அச்சோழருடைய பாதங்களை வணங்கி நின்று "மகாராஜாவே, மனந்தளர்ந்தருளுவது இதற்குப் பரிகாரமாகாது. உம்முடைய புத்திரனைக்கொண்டு கோவதைக்குத் தருமநூல்களில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தைச் செய்விப்பதே தருமம்" என்றார்கள். அதற்கு மனுநீதிகண்ட சோழர் "நீங்கள் கூறும் பிராயச்சித்தம் கன்றையிழந்தலறும் இப்பசுவினது நோய்க்கு மருந்தாகுமா; நான் ஏகபுத்திரனை இழக்கின்றேன் என்று கருதி நீங்கள் எல்லீருஞ்சொல்லிய இவ்வார்த்தைக்கு நான் இசைந்தேனாயின், நடுவுநிலைமை தவறுதா; உயிர்களுக்குத் தன்னாலும், தன்பரிவாரத்தாலும், பகைவராலும், கள்வராலும், உயிர்களாலும் எய்தற்பாலனவாகிய ஐந்து பயத்தையும் நீக்கி அவைகளைக் காப்பவனன்றோ அரசனெனப்படுவான். நான் என்புத்திரன் செய்த பாவத்தின்பொருட்டுப் பிராயச்சித்தஞ் செய்தற்கு உடன்பட்டுப் பிறனொருவன் செய்த பாவத்தின் பொருட்டு அவனைக் கொல்வேனாயின், ஆதிகாலத்திருந்த மனுவினாலே செய்யப்பட்ட தருமநூல்விதி இப்பொழுது மனுவென்னுட ஒரு சோழனால் நீக்கப்பட்டது என்னும் பழிமொழி உலகத்திலே நிலைபெறுதா" என்றார். அப்பொழுது மந்திரிகள் "மகாராஜாவே' இப்பூமியின்கண்ணே இதுபோல முன்னும் நடந்திருக்கின்றதே இக்குற்றத்தின்பொருட்டு உம்முடைய புத்திரனைக் கொல்லல்முறை யன்று. தருமநூலில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தஞ் செய்வதே

பண்டுதொட்டு ஆன்றோர் வழங்கிய வழக்கு" என்றார்கள். அதற்கு மனுநீதிகண்ட சோழர் "நீங்கள் தருமநெறியின் உண்மையைச் சிறிதும் சிந்தியாது பேசுகின்றீர்கள். எந்தலோகத்திலே எந்தப் பசு கன்றையிழந்த துன்பத்தினால் ஆராய்ச்சி மணியை அடித்தது; சொல்லுங்கள். அன்றியும் சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் திருவாரூரிலே பிறந்த உயிரைக்கொன்றானே. ஆதலால் அவனைக் கொல்வதே துணிபொருள் என்று சிந்தியுங்கள். நான் இப்பசுவினது துயரத்தை நீக்கவல்லனல்லேன். ஆதலால் இப்பசுத் தன் கன்றையிழந்து துயருறுதல்போல நானும் என்புத்திரனையிழந்து துயருறுதலே நீதி" என்று சொல்லி, எவ்விடத்தும் எக்காலத்தும் எவராலுஞ்செயற்கரிய செய்கையைச் செய்யத்துணிந்தார். உடனே மந்திரிகள் அஞ்சி, அவ்விடத்தினின்று நீங்கினார்கள்.

மனுநீதிகண்ட சோழர் தம்முடைய புத்திரனை அங்குவரவழைத்து, ஒரு மந்திரியைப் பார்த்து, "நீ இந்தப்பிள்ளையை வீதியிலே தேர்க்காலின் கீழே கிடத்தித் தேரை நடத்தக்கடவாய்" என்றார். அம்மந்திரிபோய், அவ்வாறு செய்யாது தன்னுயிரை விடுத்தான். அதனையுணர்ந்த மனுநீதிகண்ட சோழர் தம்முடைய புத்திரனைத் தாமே கொண்டு வீதியிற்சென்று, தம்முடைய குலத்துக்கு ஒருபுத்திரனே உளன் என்பதைச் சிந்தியாது, தருமவழி நடத்தலொன்றையே சிந்தித்து, அவனைக் கீழேகிடத்தி, அவன் மார்பிலே உருளை அழுந்தும்படி தேரை நடத்தினார்.

மனுநீதிகண்ட சோழர் செய்த இச்செயற்கருஞ் செய்கையைக் கண்டு, மனிதர்கள் தரியாது கண்மழை பொழிந்தார்கள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். சர்வலோகைக நாயகராகிய தியாகேசர் இடபவாகன மேற்கொண்டு, தேவர்களும் பூதர்களும் புடைசூழ எழுந்தருளிவந்து முன்னின்றார். மனுநீதிகண்ட சோழர் அவரைத் தரிசித்து வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலின் மூழ்கினார். அப்பொழுதே பசுக்கன்றும் இராஜகுமாரனும் மந்திரியும் உயிர்பெற்றெழுதலும், அதுகண்ட சோழர் தாம் இத்தன்மையினரென்றறியாதவராயினார். அவர் தமது பாதத்தில் வந்து வணங்கிய புத்திரனைத் தழுவி மனமகிழ்ந்தார். பசு தன்னையணைந்த தன்கன்று உண்ணும் வண்ணம் பாலைப் பொழிந்து தனக்குண்டாகிய துன்பம் நீங்கிற்று. தியாகேசர் மனுநீதிகண்ட சோழருக்குத் திருவருள் செய்து மறைந்தருளினார்.

பஸ்மாசுர விஜயம்.

மகா சைவாபிமானியாய் விளங்கிய

ஸ்ரீ - சோமசுந்தர நாயகரவர்களியற்றியது.

சிவன் பூரணராகையால் அவரில்லாத விடமொன்றுமில்லையாக, அவரையன்றிப் பரமாணுவு மசையாதாக, அவர் பஸ்மாசுரன் என்னும் அசுரனுக்குப்பயந்து ஏன் ஓடி யொளித்தனர் என்று பாஞ்சராத்திரிகள் வினவுவர். இந்தக் கதையோ வெனின், பஸ்மாசுரனென்பவனொருவன் சிவனைநோக்கித் தவம்புரிந்து, அவர் வெளிப்பட்ட காலையில், யாருடைய தலையில் தன்கை வைத்தபோதினும் அவர்கள் தலை சிதறும்படியான வரத்தைவேண்டியதாகவும், அப்படியே கொடுக்கப்பெற்று, உடனே வரத்தைக்கொடுத்தவர் தலையிலே தானே அவன் கைவைத்துப் பரீக்ஷிக்கத் தொடங்குகையில், அவர் பயந்து ஓடிப்போய் விட்டதாகவும், அப்போது விஷ்ணுமூர்த்தி அங்குவந்து பெண்வடிவந்தாங்கி அவனை மயக்கி நீ ஸ்நானம்பண்ணிவந்தால் உன்னைப் புணரவிசைவேனென்றுகூறி, அந்தவிடத்தில் எங்குஞ்சலமில்லாமற் செய்ததாகவும், அதற்கிசைந்த அந்த வசுரன் சேறு நீருமாய்க்கிடந்த சிறுபள்ளத்திலிரங்கி அந்தச் சேற்றைத் தன்கையால் வாரித் தன்தலைமேல் வைத்தமாத்திரத்தில் அந்தவரம் அவனுக்கே பலித்து உடனே யிறந்தானெனவும் வழங்கிவருகிறது. அந்தக்காலத்தில் விஷ்ணுவால் அவன்சாகாவிடில் சிவன்றலையில் அவன் கைவைப்பானாகையால் சிவன்சாவரென்பது அவர் துணிபாம்.

இதனை முறையே மறுத்து விவகரிப்பாம். சிவன் பூரணராகையால், அவரில்லாதவிட மொன்றுமில்லை யென்பது திண்ணம். அவர் பூரணராகுந் தன்மை அரூபத்தாலென்பது விளங்கும். அப்படியே அவர் ஏகதேசராகுந்தன்மை ரூபத்தாலென்பதும் அமையும். அருவத்தாற் பூரணராயும், உருவத்தா லேகதேசராயும் விளங்கும் அவரியற்கைத்தன்மை அவ்வருவமும், உருவமு மல்லாமையால், அவ்விருதன்மையுந் தனது அருள்விலாசமாக வுடையவனோர்பால் இரண்டுதன்மையு மேககாலத்தில் எப்படி நிகழுமென்னுமாசங்கை நிரஸ்தமென்க. அருவம் உலகுயிர்க ளியங்குதற் பொருட்டும், உருவம் உயிர்க்கு அநுக்கிரகித்தற் பொருட்டுமென்பது சிவாகமத் துணிபாதலறிக. ஆகவே அருவத்தாற் பூரணராகிய

சிவன் உருவத்தா லேகதேசராகிப் பஸ்மாசுரன்மாட்டு நாடகம் புரிந்தமை அமைதிபெற்றமை காண்க. இனி அவரையின்றி ஓரணு வும் அசையாதென்பதும் உண்மை! உண்மை!!. அதனால், பஸ்மா சுரன் றீயவெண்ணமும், தீயசெய்கையும் சிவனையே பற்றி நிகழு மெனின், அவைமாத்திரமேயன்று. எல்லாத்தீமையும் சிவனையே பற்றி நிகழ்தல்காண்க. எல்லா நன்மையும் பற்றி நிகழுமாபோல், நன்மையுந் தீமையுஞ் சிவனை யடியாகக்கொண்டே சீவிக்குமெனின் உயிர்களை அவற்றிற் கிலக்காக்குவ தென்னையெனின், அவ்வுண்மை யை விரிப்பாம். சுத்தமொன்றையும் அசுத்தமொன்றையும் காணப் போந்தகண் சூரியனுதவியின்றி அவற்றைத்தானே காணுதல் யாண் டிசையும்? கதிரொளிகாட்டக் கண்காணு முண்மையால், அக்காட் சிக்குக் கதிரொளியே காரணமென்பது வெளிப்பட்டது. கண்ணொ ளியோடு கதிரொளி கலந்திருக்குமுண்மையால் கதிரொளி கலவாத கண் தானே யொன்றையுங் காணாது. ஆதலால், சுத்தத்தைக் கண்ட சுகமும், அசுத்தத்தைக்கண்ட சுகமின்மையும், கண்ணுக்கோ கதிரொளிக்கோ வெனின் கண்ணுக்கேயன்றிக் கதிரொளிக்கல்லா மை வெளிப்படலால், நன்மை தீமைகளை நாடுமுயிர்கள்பால் நிகழும் யாவும் உயிர்கட்கேயெனவும், அந்நிகழ்ச்சி நங்கருணாசாலியை யன்றி யியங்கப் பெறாதெனவும், அவ்வியக்கம் பற்றியே அவற்றானுண்டா குங் குணதோடங்களவர்பாற் சாராவெனவும் நிச்சயிக்கப்பட்டது. தீமையை யெண்ணினவன் அசுரன். எண்பித்தவன் சிவன். வரத் தைக்கேட்டவன் அசுரன். கேட்பித்தவன் சிவன். வரத்தைப் பெற்றவன் அசுரன். பெறுவித்தவன் சிவன். சிவனைத் துரத்தின வன் அசுரன். துரத்துவித்தவன் சிவன் என்னுமிசார்த்தம் வெளிப் படலால், அவரையன்றிப் பஸ்மாசுரன் எப்படி விவகரித்தல் கூடு மென்னு மாசங்கையும் பரிஷ்கரிக்கப்பட்டது. (உடுப்பானும் பாலன முண்பானு முய்வித்தொருவர் தம்மைக், கெடுப்பானு மேதென்று கேள்விசெய்வானுங் கெதியடங்கக், கொடுப்பானுந் தேகியென் றேற்பானுமேற்கக் கொடாமனின்றே, தடுப்பானு நீயல்லையோ தில்லையானந்தத் தாண்டவனே) என்னுந் திருவாக்கே யீண்டுச் சிந்திக்கற்பால தென்க. இன்ன கல்யாணகுணக விக்கிரஹமாகிய நம்பரசிவப் பிரபுவைப் பஸ்மாசுரனோடு சாம்யங்கூறத்தக்க வோர் பசுவாகிய விஷ்ணுமூர்த்தி பிராணபிட்சை தந்துரட்சித்தாரென்னும் பேடிவாசகத்தைச் சற்றே பரியாலோசிப்பாம்.

சிவனைக் காப்பாற்றவேண்டி யிரக்கம் வகித்த விஷ்ணு தன்ய தார்த்த வடிவத்தால்வந்து அவனைக் கொல்லாமல் பெண்வடிவத் தால் வஞ்சித்ததென்னை? பெண்வடிவமாய் வந்தது தன்றலையில்

அவன் கைவைப்பானென்று அஞ்சியேயன்றோ? இதனால், சிவன் வரத்துக்கு விஷ்ணுவும் பயந்தனரென்பது பெறப்படுகிறதன்றோ? அவன் விஷ்ணுதலையில் கைவைத்தால் சிவன் வரம் பலியாதெனின், விஷ்ணுவுக்கே பலியாதபொழுது அவ்வரத்தைக் கொடுத்தவர்க்கு அது எப்படி பலிக்கும்? தீவட்டியிலே நின்றுங் கொண்ட தீபம் அத்தீவட்டியைச் சுடுவதெப்படி? விஷ்ணு தன்னுடைய பரத்துவத்தை விளக்கிச் சிவனைக் காக்கவந்ததுண்மையாயின், தன்னுடைய யதார்த்தவடிவமாய் வெளிப்பட்டு அவனுடையகை தன்றலையில் வைக்கப்பெற்றுத் தான் சாகாதவராகிப் பின்னரவனைக் கொல்ல வேண்டும். அங்ஙனமின்றிப் பெண்வடிவந்தாங்கி வஞ்சித்தது ஒரு அருமையா? சுந்தோபசுந்தாளிறக்க வஞ்சவேடந் தாங்கிவந்தவோர்பெண்ணிலிந்தவிஷ்ணுவுக் குண்டாகிய ஆதிக்கம் யாது? இன்னும், சிவனைக் காக்கவந்த விஷ்ணுவை அந்தச் சிவன் புணர்ந்து அரிகரபுத்திரனென்னு மோர்பிள்ளையைத் தந்ததென்னை? விஷ்ணு தன்னுடைய முதலாகிறபோது அவரைச் சுதந்தரமிழந்த பெண்டீராகக்கொண்டு சிவன் ஆண்டதெப்படி? இதனால் சிவன் புருஷனும், விஷ்ணு ஸ்திரீயும் என்பது பெறப்பட்டது. ஆகவே, அன்னோர் உயர்வுதாழ்வுகள் வெளிப்பட்டமை காண்க.

விஷ்ணுவுக்கு அபகர்ஷம் வந்தால் வரட்டும். சிவன் ஓடியதென்னையெனின், அதனைப் பரிகரிப்பாம். சிவன் ஓடாது நிற்பரேல், அவன் அவருடைய தலையில் கைவைப்பதில் தடையில்லை. அப்படிவைத்தால் அவர் சாகமாட்டார். சாகாதபோது அவர் கொடுத்தவரம் பொய்ப்பட்டொழியும். ஒழியவே, அவர்கொடுக்கிறவரம் பலிக்கிறதில்லை யென்னுமோ ரசங்கத முலகிலுண்டாம். உண்டாகவே, அவரை ஆசிரயிப்பது அவலமென்றுகொண்டு உலகமழியும். இன்ன அவதிகளுண்டா மென்பது கொண்டு, எல்லாம் வல்ல கடவுளாகிய சிவபெருமான் பயந்தவராக வோடினர். ஓடுவதெற்றுக்கு? வேறுவகையில் அதை நிவர்த்தி செய்யலாகாதோவெனின், தாம் கொடுத்தருளிய வரத்தினுறுதியை விளக்கற்பொருட்டெனவறிக. அந்த வரத்துக்குச் சிவபெருமானே பயந்தனரெனின், உலகிலதற்கு அஞ்சாதவர் யாருளர்? எனத்தெளிந்து சிவன் கொடுக்கிற வரம் பொய்யா நலத்தது என்று நம்பி உலகம் தம்மை வழிபட்டுய்தற் பொருட்டென்னு முண்மை யினிது வெளிப்பட்டது. ஆகவே ஓடியது அருளுடைமையென்பது புலப்பட்டது.

எல்லாம் தாமேயாகிய கடவுள் ஓடவேண்டுமா? அவன் கையைத் தன்றலையில்வைக்க வருகையில் அவன்கைக் கெட்டாதபடி சற்றே நீண்டாலாகாதா? பிரமவிஷ்ணுக்கள் தம்மை யளந்தறியாதபடி ஆடல்கண்டவ ரிப்பேதைப் பசுவை யாட்டிப் படைப்பது கூடாதா? வரத்தைப் பெற்றவனுக்கு உண்டாகிற வாதிக்கம் வரத்தைக் கொடுத்தவருக் கில்லாமற் போச்சுதா? அவன் இவர்தலையில் கைவைப்பதன் முன்னர் இவர் அவன்றலையில் கைவைத்தெரித்துவிடக்கூடாதா? எதிர்ப்பட்ட மன்மதன்கதியை அந்தப் பாதகன் அடையும்படிசெய்வது அவராலாகாதா? முப்புரங்களையும் அட்ட புன்னகை எங்கே போயிற்று? எல்லா வுலகங்களையும் சர்வசம்ஹாரத்தில் பஸ்மமாக்கி யழிப்பான் அவர் நெற்றியினின்று மெழும் புலிங்கம் தணிந்துபோய்விட்டதா? இத்திறப் பேராற்றலுடைய பெரியோர் உண்மையாகவே பயந்தோடின ரென்னும் அகங்காரவாதம் நிஸ்புருஹமென்க. இந்தவுண்மையை யறியாது விஷ்ணுகாவாவிடில் சிவன் சாவாரென்னும் பேய்க்கூச்சல் காலவாரிக்கொண்டதென்க. இன்னும் விரிக்கிற்பெருகும்.

கடவுளின் சொரூப தடத்த இலக்கணங்கள்.

கடவுளுக்குச் சொரூபம் எனவும் தடத்தம் எனவும் இரண்டு வகையா னநிலைகள் உண்டு. அவர் குணம் குறி பேர் செயல் முதலியன வொன்றுமில்லாமல் வெறும் சச்சிதானந்த மயமாயிருக்கும் நிலை அவருடைய சொரூபநிலை யென்னப்படும். இந்நிலையில் அவர் பதி, பரசிவம், பிரமம், சச்சிதானந்தம் என்பனவாதியாய் பேர்களைப் பெறுவர். அவர் நீரின் தண்மை நீரைவிட்டு நீங்காதிருப்பதுபோலவும், அனலின் வெம்மை அனலைவிட்டு நீங்காதிருப்பதுபோலவும் தம்மைவிட்டு நீங்காது தம்முடைய இயற்கைக்குணமாயிருக்கும் அருள் என்னுஞ் சத்தியைத் திருமேனியாகக்கொண்டு பலவடிவங்களோடுங்கூடி பல திருநாமங்களைப் பெற்று சிருட்டி முதலிய தொழில்களைச் செய்யும் நிலை தடத்தநிலை யென்னப்படும். இந்நிலையில் அவர் சிவன், சதாசிவன், மகேசுரன், உருத்திரன், ஆதியாய் எண்ணிறந்த திருநாமங்களைப் பெறுவர்.

திருவாசகம்.

ஒருநாம மோருருவ மொன்றுமிலார்க் காயிரம்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

சிவபெருமானுடைய சொரூப இலக்கணங்களை யெடுத்துக் கூறும் போது பலசமயத்தாரும் அவரைத் "தந்தெய்வம் எந்தெய்வம்'' என்று வழக்கிட்டு வழிபடுவர். தடத்த விலக்கணத்தைக்கூறும் போது தாம்வழிபடும் தெய்வம் வேறு, அவர் வேறு என்று மயங்கி மாறுபடுவர். இவர்கள் கடவுளின் சொரூப தடத்த இலக்கணங்களின் உண்மையை யறியாமையால் இவர்களிடம் எண்ணிறந்த சந்தேக விபரீதங்கள் விளைகின்றன. இதனை யுணர்ந்தவர்களுக்கு யார் எத்தெய்வத்தை வழிபட்டாலும், அவ்வழிபாடுகளியாவும் சிவபெருமானார்க்குச் செய்யும் வழிபாடுகளென்பது விளங்கும். ஆதலால் சுத்தாத்துவித சித்தாந்த சைவர்களுக்கு எல்லாச் சமயங்களும் சோபானக் கிரமத்தில் உடன்பாடேயாம். (ப-ர்.)

(இன்னும் வரும்.)

ஆயுள் சந்தா.

இவ்வருடம் இதுவரையிற் சேர்ந்த ஆயுள் சந்தாதாரர்களும். அவர்கள் செலுத்திய தொகைகளும்.—

தென் ஆப்பிரிக்கா ரொடேஷியா புலாவேயோவிலிருக்கும் மெஸ்ஸர்ஸ் முதலி அண்டு நாயுடு வர்அகளும், ஸ்ரீமான் க. கிருஷ்ண படையாட்சியவர்களும் ரூபா 34—2—0.

ஸ்ரீமான் அள. சித. அள. அளகப்பச்செட்டியாரவர்கள், தேவகோட்டை. ரூபா 10—0—0.

ஸ்ரீமான் நா. முரு. நாராயணன் செட்டியாரவர்கள், (சி. மெ. வீதி. புதூர் காரைக்குடி) முன் பத்து ரூபா கொடுத்ததுமன்றி, பத்திரிகை ஒரு பாரம் அதிகமாய் அச்சிடப்பெறுவதையும், காகிதத்தின் விலை யேற்றத்தையும் சிந்தித்து மறுபடியும் ஐந்து ரூபா அனுப்பினார்கள்.

ஷை மெஸ்ஸர்ஸ் முதலி அண்டு நாயுடு அவர்கள் அச்சுக்கூடத்தில் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டி பத்து ரூபா அனுப்பினார்கள். இவர்கள் இச்சபைக்குப் பலவழிகளிலும் உதவிசெய்து வருகிறார்கள்.